**தலைப்பு 249 - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 249 - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 15 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,400,858.99 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,380,811.93 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 20,047.06 மில்லியன் அதாவது 1.43 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 531,602.57 | 528,958.83 | 2,643.74 | 0.50 |
| மூலதனம் | 5,475.32 | 5,457.99 | 17.33 | 0.32 |
| கடன் மீளச் செலுத்துதல் | 863,781.10 | 846,395.11 | 17,385.99 | 2.01 |
| மொத்தம் | 1,400,858.99 | 1,380,811.93 | 20,047.06 | **1.43** |

**2.2 வருமானக் கணக்குகள்**

திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக 11 வருமானக் குறியீடுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 80,935.00 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 62,210.00 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 40,760.17 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வருமான சேகரித்தல் திருத்தப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 27.98 சதவீதம் முதல் 130.17 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வருமானக் குறியீடு** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | | **உள்ளபடியான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக** |
|---|---|---|---|---|---|
| | **ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **மிகை/ (பற்றாக்குறை)** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 20.03.99.00 | 15,000.00 | 18,800.00 | 9,342.85 | (9,457.15) | 49.70 |
| 20.03.01.00 | 110.00 | 110.00 | 143.19 | 33.19 | 130.17 |
| 20.03.02.99 | 9,000.00 | 5,500.00 | 4,710.48 | (789.52) | 85.69 |
| 30.01.01.00 | 30,000.00 | 15,000.00 | 6,013.86 | (8,986.14) | 40.09 |
| 20.06.02.00 | 300.00 | 350.00 | 97.93 | (252.07) | 27.98 |
| 20.02.02.99 | 1,500.00 | 1,400.00 | 953.55 | (446.45) | 68.11 |
| 20.02.02.01 | 6,725.00 | 3,850.00 | 3,544.81 | (305.19) | 52.71 |
| 20.06.04.00 | 14,300.00 | 14,000.00 | 12,960.81 | (1,039.19) | 92.58 |
| 20.03.03.02 | 1,500.00 | 1,000.00 | 962.02 | (37.98) | 96.20 |
| 20.02.01.99 | 300.00 | 200.00 | 95.09 | (104.91) | 47.55 |
| 20.05.99.00 | 2,200.00 | 2,000.00 | 1,935.58 | (64.42) | 96.78 |
| **மொத்தம்** | **80,935.00** | **62,210.00** | **40,760.17** | **(21,449.83)** | **65.52** |

**2.3 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 24901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 4.50 | 3.19 | 3.00 | 3.71 | 21.00 | 17.16 |

### 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் 7002/0000/00/0371/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 76,753 ஆகும்.

### 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

06 செலவின விடயங்களுக்கு மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 22 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவராக 11 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 20.02.01.99 - ஏனைய குத்தகை வாடகை வருமானக் குறியீடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2009 யூன் 01 ஆந் திகதி இரண்டு தனியார் கம்பனிகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட இரண்டு வருட காலத்திற்கான வாடகை உடன்படிக்கை காலாவதியாகியிருந்ததுடன் திருத்தப்பட்ட வாடகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. எனினும் உரிய வாடகை ரூபா 525,000 முதல் ரூபா 485,000 வரை குறைக்கப்பட்டு 2014 யூன் 01 ஆந் திகதி முதல் 2019 மே 31 ஆந் திகதி வரை ஐந்து வருட காலத்திற்கு உடன்படிக்கை

நீடிக்கப்பட்டதாக கடிதமொன்றின் மூலம் மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடு அறிக்கையின் மூலம் அந்த வாடகை குறைக்கப்பட்டிருந்த போதிலும், உரிய காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி மாத்திரம் குறிப்பிடப்பட்டதுடன் உரிய உடன்படிக்கையின் கட்டிடமும் உள்ளடங்கியிருந்தது.

(ii) 2003 பெப்ரவரி 07 ஆந் திகதிய இலங்கை அரசிற்கும் தனியார் கம்பனியொன்றிற்கும் இடையே 35 வருட காலத்திற்கு கைச்சாத்திடப்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கையின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஐக்கிய அமெரிக்க குடியரசின் முன்னைய 05 வருடங்களை உள்ளடக்கிய பணவீக்க விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு சுயமாக திருத்தப்படும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அத்திகதியிலிருந்து 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் வருடாந்த வாடகைப் பெறுமதி அமெரிக்க டொலர் 1,000 தொகை மாற்றமின்றிய பெறுமதியாகக் காணப்பட்டது.

(iii) தனியார் கம்பனிக்குரிய இலங்கை அரசிற்கும் ஐக்கிய அமெரிக்க குடியரசிற்கும் இடையே 1991 திசெம்பர் 09 ஆந் திகதி முதல் 20 வருடங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 10 ஆந் திகதியளவில் அந்த உடன்படிக்கை காலாவதியாகியிருந்தது. இது தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலாக உரிய நிறுவனம் தொடர்ச்சியாக வாடகை செலுத்தியிருந்ததாகவும் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பாக உரிய தரப்பினரிடம் கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iv) 2012 நவம்பர் 26 ஆந் திகதிய 054/2012 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி தனியார் கம்பனியொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட ரூபா 7,000.00 மில்லியன் பெறுமதியான காணியின் பிணைமுறியின் பெறுமதி 2015 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப பிரச்சினையின் காரணமாக அது இரத்துச் செய்யப்பட்டதாகவும், 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதாகவும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(v) 2013 ஆம் ஆண்டு முதல் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்ட கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட போதும், வாடகைக்கு வழங்கப்பட்டவரால் தொடர்ந்தும் அந்தக் காணி பயன்படுத்தப்படுவதாக கொழும்பு பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வருமானம் மத்திய அரசிற்குரிய வருமானமா அல்லது மாகாண சபைக்குரிய வருமானமா என்பது தொடர்பாகவும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாகவும் சட்ட அலுவல்கள் திணைக்களத்திடம் வினவப்பட்டிருந்தது.

(ஆ) 20.02.02.01 வருமானக் குறியீடு - கடன் வழங்கலும் வட்டியும்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீள அறவிடப்படாத கடன் வட்டியை அறவிடுவது தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 39,804.37 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி உரித்து மாற்றல் பத்திரத்தின் மூலம் உரிமை மூலனதாக மாற்றப்பட்டிருந்தது. எனினும் 2015 மார்ச் 09 ஆந் திகதிய

MOFP/PE/CEB/CM/2015 ஆம் இலக்க மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் வட்டியும் மூலதனத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. எனினும் அந்த நிலுவை வட்டி 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உப கடனாக 09 நிறுனங்களுக்கு வழங்கப்பட்ட 14 கடன் மீதிகளுக்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,545.83 மில்லியன் தொகையான கடன் வட்டி வருமானத்தையும் சேகரிப்பதற்கு திணைக்களம் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது.

(இ) 20.02.02.99 ஆம் வருமானக் குறியீடு - வட்டியும் ஏனைய வருமானமும்

---

மேற்கூறப்பட்ட வருமானக் குறியீட்டிற்காக 2015 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட வேண்டிய வருமானமாக ரூபா 1,500,000 மில்லியன் தொகை ஆரம்ப மதிப்பீடாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதும், அது ரூபா 1,400.00 மில்லியன் வரை திருத்தப்பட்டு மதிப்பீடு குறைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 953.55 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 68.11 சதவீதமாக இருந்தது.

(ஈ) 20.03.01.00 ஆம் வருமானக் குறியீடு - திணைக்கள ரீதியான விற்பனை

---

2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் முறையான அறிக்கை பேணப்பட வேண்டியது அவசியமானது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட வருமானக் கணக்கு தொடர்பாக திணைக்களத்தால் மாதாந்த கணக்குப் பொழிப்பு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கணக்குப் பொழிப்பில் குறிப்பிடப்பட்ட தகவல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வேறு எந்தவொரு அறிக்கையோ அல்லது பதிவேடொன்றோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. வருமானக் குறியீட்டிற்குரியதாக ரூபா 66.99 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்ட சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் அப்பதிவேடு அல்லது ஏடுகள் பேணப்படவில்லை.

(உ) 20.03.02.99 ஆம் வருமானக் குறியீடு - நிர்வாக ரீதியான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்

---

மேற்கூறப்பட்ட வருமானக் குறியீடு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டிற்காக இந்த வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 9,000.00 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அந்த வருமான மதிப்பிடு ரூபா 5,500.00 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 4,710.48 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் 52.34 சதவீதமாகவும், திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 85.65 சதவீதமாகவும் இருந்தது.

(ii) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தியின் பிரகாரம் நிலுவை வருமானம் மேலும் ஒன்றுசேர்கின்றமையை தடுப்பதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், வருமானக் கணக்கில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,289,429 கூட்டுத்தொகையான நிலுவை

வருமானத்தை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஊ) 20.03.99.00 ஆம் வருமானக் குறியீடு - விற்பனையும் கட்டணமும் (ஏனைய பெறுவனவுகள்)

---

மேற்கூறப்பட்ட வருமானக் குறியீட்டிற்குரியதாக மீளாய்வாண்டின் போது ரூபா 15,000.00 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்ட போதும் அந்த வருமான மதிப்பீடு ரூபா 18,800.00 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 9.342.85 மில்லியன் வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தில் 62.29 சதவீதமாகவும், திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி 49.70 சதவீதமாகவும் இருந்தது. வருமானங்களை எதிர்வு கூறும் போது சரியான தரவுகள் பயன்படுத்தப்படாமல் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் பொருத்தமற்ற வகையில் ஆரம்ப மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(எ) 20.05.99.00 ஆம் வருமானக் குறியீடு தற்போதைய - கையளித்தல் தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய கையளித்தல்

---‘

வருமானக் கணக்கின் கீழ் உரிய நிறுவனத்திற்கு பணத்தை மீளச் செலுத்துவதற்காக 1503 ஆம் செலவின விடயத்தின் கீழ் ரூபா 550.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த நிஏற்பாடுகளில் ரூபா 40.55 மில்லியன் நிதிஏற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செலவின விடயத்தின் கீழ் தேறிய நிதிஏற்பாடு ரூபா 509.45 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. அதில் ரூபா 346.11 மில்லியன் மாத்திரம் உரிய நிறுவனங்களுக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. அது தேசிய லொத்தர் சபையிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,433.10 மில்லியன் தொகையான மொத்த வருமானத்தில் 24.15 சதவீத அளவாக இருந்தது.

(ஏ) 20.06.02.00 ஆம் வருமானக் குறியீடு - மூலதனச் சொத்துக்களின் விற்பனை

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக இந்த வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 300.00 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 350.00 மில்லியன் வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 97.93 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் 32.64 சதவீதமாக இருந்ததுடன் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 27.98 சதவீதமாக இருந்தது.

(ii) 2015 யூலை 10 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 09 நிறுவனங்களினால் வாகன விற்பனைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 124.97 மில்லியன் வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பெறப்பட்ட தகவல்களின் படி 2015 ஆம் ஆண்டின் போது 45 அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களில் 2217 வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்பட்டமைக்கான தகவல்கள் வருமானக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 20.06.04.00 ஆம் வருமானக் குறியீடு - கடனை மீள அறவிடல்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) Renewable Energy for Rural Economic Development Project (RERED) இதற்காக வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 1,332.99 மில்லியன் கடன் தொகையிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 633.39 கடன் மீதியொன்று அறவிடவேண்டியிருந்தது.

(ii) 1993 மார்ச் 10 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ADB 1204 (SRI) SF உடன்படிக்கையின் படி பெறப்பட்ட ரூபா. 276.75 மில்லியன் கடன் பணம், மாநகர சபை மற்றும் நகர சபை செயற்திட்டங்களுக்காக உப கடனாக வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டு கடன் பணம் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு 2 வருட சலுகைக் காலத்துடன் 22 வருடங்களில் செலுத்தி முடிக்க வேண்டியிருந்த போதிலும், இதில் வழங்கப்பட்ட உப கடன் தொகையிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 276.75 மில்லியன் தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(iii) பதுளை மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடன் தொகுதியின் கீழ் வழங்கப்பட்ட கடனின் அடிப்படையில் பதுளை மாவட்ட சமூக சக்தி அமைப்பிற்கு வழங்கப்பட்ட ரூபா. 7.75 மில்லியன் கடன் தொகையிலிருந்து ரூபா. 5.82 மில்லியன் கடன் மீதியொன்று அறவிடவேண்டியிருந்தது. அந்தக் கடன் பணத்தை அறவிடுவதற்காக திணைக்களத்தின் கடிதம் மூலம் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அக்கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவையாக இருந்த ரூபா. 766.83 மில்லியன் கடன் மீதியிலிருந்து எந்தவொரு தொகையையும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. நெதர்லாந்து மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்ட அமெரிக்க டொலர் 12.94 மில்லியன் கடன் பணத்திலிருந்து பால்தரும் மாடுகளைக் கொள்வனவு செய்வதற்காக சபைக்கு கடன் வழங்கப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி அந்தக் கடன் பணத்தை அறவிடுவதற்காக நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது, தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபையினால் அக்கடனைச் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கூறப்பட்ட நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(v) கடன் இலக்கம் 2013012 SL இன் கீழ் பெறப்பட்ட கடன் பணத்திலிருந்து மில்கோ நிறுவனத்தின் தொழிற்சாலையை நவீனமயப்படுத்துவதற்காக (பகுதி 1) கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன்களிலிருந்து 2015 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் முறையே ரூபா 350.68 மில்லியன் மற்றும் ரூபா 309.31 மில்லியன் நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக 2015 ஆம் ஆண்டின் போதும் 2 ஆம் கட்டத்திற்காக ரூபா 387.61 மில்லியன் தொகையொன்று மில்கோ கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்குரிய யூரோ 33.4 மில்லியன் நிதி மோசடி தொடர்பாக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்தக் கடன் பணம் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) 08 நிறுவனங்களினால் பெறப்பட்டிருந்த 13 கடன் தொகைகள் தொடர்பாக ரூபா 1,941.47 மில்லியன் நிலுவை கடன் மீதி காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் அரையாண்டு நிலுவை வருமான அறிக்கைகளில் அந்தக் கடன் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 30.01.01.00 ஆம் வருமானக் குறியீடு - வெளிநாட்டு மானியம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வருமானமாக ரூபா 35,000,000 மில்லியன் தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு பின்னர் ரூபா 15,000.00 மில்லியனாக திருத்தப்பட்டிருந்தது. ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 6,013.86 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானம் ஆரம்ப மதிப்பீட்டில் 17.18 சதவீதமாக இருந்ததுடன் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் 40.09 சதவீதமாக இருந்தது.

(ii) 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) இன் கீழ் நவீன உயிரியல் வலுச்சக்தி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு மானியமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 3.22 மில்லியன் தொகையான செயற்திட்டத்தை அமுல்படுத்தவதிலுள்ள தாமதத்தின் காரணமாக, 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி மானியதாரருக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது. மானியமாக இன்னும் 5 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 75.67 மில்லியன் மீளாய்வாண்டின் போது மானியதாரருக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டு ஆரம்பம் வரையில் மானியமாகக் கிடைத்த ரூபா 2,731.75 மில்லியன் தொகை 23 பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் ஆண்டின் இறுதிவரையிலும் அவ்வாறே காணப்பட்டது.

(iv) அரசாங்க மானியங்களுக்காக பேணப்பட்ட 07 பழைய வைப்புக் கணக்குகளில் கணக்கு வைத்தலின் வழுவின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 30.69 மில்லியன் கூட்டுத்தொகையான வரவு மீதியைச் சரிசெய்வதற்காக மீளாய்வாண்டின் போது குறிப்புக்கள் இடப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி வருமானத்தில் மீளச் செலுத்தலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.3 பொது வைப்புக் கணக்கு**

---

திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்குகள் 358 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 177 பொது வைப்புக் கணக்குகளில் எந்த மீதியும் காணப்படவில்லை.

(ஆ) 2014 மற்றும் 2015 என்ற இரண்டு ஆண்டுகளிலும் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இடம்பெற்றிராத ஆரம்ப மீதியை மாத்திரம் கொண்டுள்ள வைப்புக் கணக்குகள் 05 ஆகும்.

(இ) 2014 ஆம் ஆண்டு முதல் ரூபா 35.12 மில்லியன் வரவு மீதியொன்று காணப்பட்ட வைப்புக் கணக்கொன்றில் அத்திகதியிலிருந்து கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

### 3.4 செயலாற்றல்

------------------------------

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தேசிய லொத்தர் சபையினால் விற்பனை செய்யப்படுகின்ற பல்வேறு வகையான லொத்தர் வருமானத்தில் திரண்ட நிதியத்திற்குக் கிடைத்த பங்களிப்பு மற்றும் அதன் மூலம் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கும் மானியம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 இன் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்காக ரூபா 534.75 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ஏனைய செலவின விடயத்திற்கு ரூபா 25.30 மில்லியன் தொகை நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 346.11 மில்லியன் அதாவது 68 சதவீதம் மாத்திரம் உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்கத்தின் கட்டுநிதிக் கணக்கை ஆரம்பிப்பதற்கான அதிகாரத்தை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட 191 கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 11,385.16 மில்லியன் வரவு மீதிகளின் கூட்டுத்தொகையும், ரூபா 41.55 மில்லியன் தொகையான செலவு மீதிகளின் கூட்டுத்தொகையும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது. 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 179 கட்டுநிதிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருந்ததுடன் மேலும் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்குகளின் எண்ணிக்கை 12 ஆகும். அவற்றின் தேறிய வரவு மீதிகளின் பெறுமதி ரூபா 870.40 மில்லியனாக இருந்தது. இது தொடர்பான பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்குரிய கட்டுநிதிக் கணக்கொன்றும் நீதி அமைச்சிற்குரிய 02 கட்டுநிதிக் கணக்குகளும் 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகள் முறையே ரூபா 53.58 மில்லியன், ரூபா 253.47 மில்லியன் மற்றும் ரூபா 302.00 மில்லியன் ஆக இருந்தன. இந்தப் பெறுமதிகளை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதிருந்தமையால் அந்த மீதிகளை பதிவழிப்பதற்கு முடியாதிருந்தது. இது தொடர்பாக அரசாங்க நிதித் திணைக்களத்தினால் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம் கட்டுநிதி மீதியில் பதிவழிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு எவ்வித நட்டமோ அல்லது இழப்போ இல்லை என்பதற்காகவுள்ள உறுதிப்படுத்தல் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததாகவும், எந்தவொரு தினத்திலும் இந்த தீர்க்கப்படாத மீதியின் காரணமாக அரசாங்கத்திற்கு நிதிரீதியான நட்டமொன்று ஏற்படுகின்றமை வெளிப்படுத்தப்படுமாயின் அதனைத் தீர்த்தல் தொடர்பாக முறைமை மற்றும் அதற்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தரிடமிருந்து தகவல்களைப் பெற்றுத்தருமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக திணைக்களத்தால் தகவல் சமர்ப்பிக்கப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித பதிவுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் காணப்படவில்லை.

(ii) இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 7002/0000/00/0071/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 76,833,208 தொகையான மீதியொன்று தீர்க்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 73,953,208 தொகை தீர்க்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டின் போது டைம்ஸ்

கட்டிடத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு வைப்புத் தொகையான ரூபா 2,880,000 உம் இந்த மீதியில் உள்ளடங்கிளிருந்தது. அந்தக் கட்டிடம் நிதி அமைச்சிற்குச் சொந்தமானதாக இருந்தமையால் வைப்புப் பணத்தை அமைச்சிற்கு கையேற்கும் படி திணைக்களத்தால் கோரப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய எஞ்சிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சனாதிபதி செயலகத்தின் 7002/0000/00/0117/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 91,033,483 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும், அதில் ரூபா 45,277,607 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதி திறைசேரி பிரதி செயலாளரின் கணக்கின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நேரடி வெளிநாட்டு கொடுப்பனவொன்றின் காரணமாக உருவாகியிருந்தது என கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iv) வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 7002/0000/00/0035/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2013 ஆம் ஆண்டிற்குரியதாக மேலும் தீர்க்கப்படாதிருந்த வரவு மீதி ரூபா 233,526,090 ஆக இருந்தது. அவ்வாறே 2015 ஆம் ஆண்டிற்குரிய தீர்க்கப்படாத வரவு மீதியான ரூபா 468,602,980 தொகையில் இன்னும் தீர்க்கப்படாத செலவு மீதி ரூபா 6,347,083 ஆகும். மேற்கூறப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்குரிய மீதியில் ரூபா 49,602,783 தொகையான இனங்காணப்படாத வேறுபாடொன்று காணப்படுகின்றமையால் அதற்காக உள்ளகக் குழுவொன்று நியமித்து அதன் சிபாரிசின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் எடுப்பது பொருத்தமானது என திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அரசாங்கத்தில் 2363 வங்கிக் கணக்குகள் காணப்பட்டதுடன் திணைக்களத்தின் தகவல்களின்படி அதில் 213 செயற்பாடற்ற கணக்குகள் காணப்பட்டன. இலங்கை வங்கியின் தகவல்களின் பிரகாரம் 284 செயற்பாடற்ற கணக்குகள் காணப்பட்டன. அதில் 209 கணக்குகளில் எவ்வித மீதியொன்றும் காணப்படாதிருந்ததுடன் எஞ்சிய செயற்பாடற்ற கணக்குகளில் 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,593.83 மில்லியன் ஆக இருந்தது. 11 செயற்பாடற்ற கணக்குகளில் கொடுக்கல், வாங்கல்கள் இடம்பெறாதிருந்தமையினாலும் செயற்பாடற்ற கணக்குகளாகக் குறிப்பிடப்பட்ட அதில் ஒரு கணக்கில் கடைசியாக கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 272 செயற்பாடற்ற கணக்குகளினது காலப்பகுப்பாய்வு 1 வருடத்திற்கு குறைவான காலம் முதல் மற்றும் 8 வருடங்கள் முதல் 9 வருடங்கள் வரையிலான காலவீச்சினைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி வரையில் இலங்கை வங்கியின் கீழ் 131 செயற்பாடற்ற கணக்குகள் காணப்பட்டதுடன் அதில் 127 கணக்குகள் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மூடப்பட்டிருந்தது.

(ஈ) 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் உரிய பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழும் திணைக்களத்தால் திறைசேரி பிணைமுறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அவ்வாறு 139 பிணை முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக 3001 செலவின விடயத்தின் கீழ் ரூபா 400.00 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 134.64 மில்லியன் பிணைமுறிகளை விடுவிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2009 மார்ச் 11 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசிற்குச் சொந்தமான ஒரு கம்பனிக்கு விநியோகிக்கப்பட்ட அ.டொலர் 10.00 மில்லியன் தொகையான திறைசேரி பிணை முறியின் காலம் 7 தடவைகளில் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி திணைக்களத்தின் கடன் தொகை மற்றும் வட்டிக்காக ரூபா 55.64 மில்லியன் வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதியும் 2013 மார்ச் 07 ஆந் திகதியும் பாராளுமன்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவினால் இந்தக் கம்பனியை தொடந்தும் நடாத்திச் செல்லும் தேவைப்பாடொன்று காணப்படாதிருந்தமையால் கலைப்பதற்கு முன்மொழியப்பட்டிந்தது. கம்பனியின் வங்கிக் கடன், கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு கையளிக்கப்பட்டு ரூபா 50 மில்லியன் பெறுமதியுடைய புதிய திறைசேரி பிணை முறியொன்றை விநியோகிப்பதற்கும், அந்த பிணை முறியை 03 வருடங்களில் சதொச நிறுவனத்தின் மூலம் தீர்ப்பதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையின் அடிப்படையில் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தக் கடன் பணமும் வட்டியும் திணைக்களத்தால் தீர்க்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) தனியார் கூட்டுறவு சங்கத்தின் சங்கமொன்றிற்கு 2006 யூலை 21 ஆந் திகதி சீனியை உள்ளடக்கிய அத்தியவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட ரூபா 50.00 மில்லியன் தொகை திறைசேரி பிணைமுறியின் செல்லுபடிக் காலம் 16 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 28 ஆந் திகதி திணைக்களத்தால் ரூபா 79.00 மில்லியன் தொகை வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 45.00 மில்லியன் கடன் பணம் மற்றும் எஞ்சியவட்டியாக இருந்தது. இந்த பிணை முறியை விநியோகிப்பதற்காக பெறப்பட்ட அமைச்சரவைக் குறிப்பு அல்லது அமைச்சரவைத் தீர்மானம் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தத் தொகையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை கோவையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதற்குரிய 2011 நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் கடன் மீளச் செலுத்தாமைக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நலிவான முகாமைத்துவமே பிரதான காரணமாக இருந்ததுடன் மொத்தத் தொகையில் 50 சதவீதத்தைத் தீர்ப்பதற்காக தேவையான நிதி ஏற்பாடு கட்டங்கட்டமாக வழங்குதல், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வணிக அமைச்சினால் அரச வங்கியுடன் கலந்துரையாடி ஏதாவது சதவீதமொன்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கடன் பணத்தை குறித்த பிரகாரம் மீளச் செலுத்தாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து கடனில் ஏதாவது சதவீதமொன்றை அறவிடுவதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தக் கடன் பணமும் வட்டியும் திணைக்களத்தால் தீர்க்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) 2010 யூலை 28 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் நுரைச் சோலை அனல்மின் நிலையத்திற்காக நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதமொன்று விநியோகிப்பதற்கு ரூபா 1.00 பில்லியன் திறைசேரி பிணை முறியொன்றை விநியோகிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2013 ஆம் ஆண்டு வரையில் ரூபா 2.00 பில்லியனுக்காக பிணைமுறி விநியோகிக்கப்பட்டிருந்தது. அது 2014 ஆம் ஆண்டு வரையில் ரூபா 3.00 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் அந்த பிணைமுறிகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டு ரூபா 5.00 பில்லியனுக்கு புதிய திறைசேரி பிணைமுறிகள்

விநியோகிக்கப்பட்டிருந்தன. அந்த பிணை முறிகளின் செல்லுபடிக்காலம் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் முடிவடையும் போது அது ரூபா 6.00 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(iv) 2005 பெப்ரவரி 02 ஆந் திகதி கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு ரூபா 207.1 மில்லியனுக்கு விநியோகிக்கப்பட்ட திறைசேரி பிணை முறியின் காலம் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் 2013 மார்ச் 01 ஆந் திகதி அதில் ரூபா 50.00 மில்லியன் செலுத்தி எஞ்சிய ரூபா 157.1 மில்லியனுக்காக திறைசேரி பிணைமுறி நீடிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அதன் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) லங்கா கனிய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்கு அவ்வப்போது திறைசேரி பிணை முறை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செல்லுபடியாகக் காணப்பட்ட பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 1,328.03 மில்லியனாக இருந்தது. கோவையின் பிரகாரம், இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பிணை முறிகளின் பெறுமதி போதியளவாக இல்லாதிருந்ததாகவும் இரண்டு அரச வங்கிகளுக்காக ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் வீதம் பிணைமுறிகள் விநியோகிப்பதற்காக அங்கீகாரம் வழங்குமாறும் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட பிணை முறிகளின் காலத்தை நீடிப்பது தவிர நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற இந்தத் தொகையைத் தீர்ப்பதற்குத் தேவையான ஆலோசனை வழங்குதலோ அல்லது எதிர்கால நடவடிக்கைகளோ திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், திறைசேரி பிணை முறிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட நிதி வசதிகளை தீர்த்து வைத்தல் தொடர்பாக அது தொடர்பில் மேற்பார்வை மற்றும் சிபாரிசுகளைச் சமர்ப்பித்த கனிய எண்ணெய் வள அபிவிருத்தி அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(vi) நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 02 வங்கிகளினால் வழங்கப்பட்டிருந்த கடன் பணத்திற்காக விநியோகிக்கப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் பெறுமதி ரூபா 6,377 மில்லியனாக இருந்ததுடன் எஞ்சிய ரூபா 5,231.01 மில்லியன் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த பிணை முறிகளுக்கு மேலதிகமாக திறைசேரியினாலும் ரூபா 2,000 மில்லியன் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தால் அப்பணத்தைத் தீர்ப்பதற்குரிய ஆலோசனை மற்றும் எதிர்கால செயல் நடவடிக்கைகள் என்பவற்றை வழங்குவதற்காக தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் சுழற்சி நிதியத்தின் நடவடிக்கைகள் 2016 மார்ச் 31 ஆந் திகதி முதல் முடிவுறுத்தப்பட்டிருந்து. 2015 ஆம் அண்டின் போது நிதியத்திலிருந்து நிறுவனங்களுக்கு நிதி விடுவிக்கப்படாதிருந்ததுடன் 2016 மார்ச் 30 ஆந் திகதி தீர்க்கப்படாதிருந்த உப கடன் மீதிக்குரிய (onlending outstanding) ரூபா 1,999.03 மில்லியன் தொகை 20.06.04.00 என்ற வருமானக் கணக்கிலும் காசேட்டில் எஞ்சிய மீதியான ரூபா 237.41 மில்லியன் 20.03.99.00 என்ற வருமானக் கணக்கிலும் செலவு வைக்கப்பட்டு நிதியம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த நிதியம் சுழற்சி நிதியமொன்றாக இருந்தமையால் மேற்கூறப்பட்ட தீர்க்கப்பட்ட உபகடன் மீதியான ரூபா 1,999.03 மில்லியன் மீதிக்குரிய தகவல்களை தனித்தனியாக இனங்காணாமல் வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டு எஞ்சிய மீதி வருமானக் கணக்கிற்கு மாற்றுதல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின்

அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அத்திகதியில் அறவிடவேண்டியிருந்த மீதி ரூபா 2,236.43 மில்லியனாக இருந்தது.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 20 | 01 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 82 | 69 | 13 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 19 | - | - |
| | மொத்தம் | 122 | 109 | 14 | 01 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட நிலையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இ.நி.சே 1 ஆம் வகுப்பில் 07 பதவிகள் காணப்பட்ட போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 08 பேரினையும் உள்ளடக்கியிருந்தது. அதன் பிரகாரம் ஒரு பதவியில் மிகையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தும், அதற்காக முறையான அங்கீகாரமொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலதிக பணிப்பாளர் பதவியொன்று 2013 பெப்ரவரி 19 ஆந் திகதி முதல் பதிற்கடமை அடிப்படையில் இலங்கைக் கணக்காளர் சேவையின் 1 ஆம் தரத்தின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் நிரப்பப்பட்டிருந்தமையால் அதற்காக நிரந்தர உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் அந்தப் பதவியின் பதிற் கடமைக்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக மேவுகை அங்கீகாரமேனும் பெற்றுக்கொள்ளப்படாமல் 3½ வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அப்பதவியின் பதிற்கடமை புரிதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.